# விளம்பரம்
VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 13 JUNE 01, 2003 பாலம் 11



வீடு விற்க,வாங்க...

Raja M. Mahendran, P. Eng.
(Vice president/Sales Rep.)



எமது நிறுவனத்தில் தொழில் புரிய வீட்டு, வியாபார பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்.

Direct: 416.315-9397
OFFICE: 416.321-6969


## சின்னவயதுக் குறும்புகளை சிந்தனை செய்தால் சிரிப்பு வரும்

நாம் சிறுவர்களாக இருந்த காலத்தில் செய்த ஒவ்வொரு செயலையும் பிற்காலத்தில் நாமே நினைத்துப்பார்த்தால் நம்மை அறியாமல் சிரிப்புத்தான் வரும். சில நிகழ்ச்சிகள் வியப்பாகவும் இருக்கும். இவ்வாறெல்லாம் நாம் தானா செய்தோம் என்ற திகைப்பும் ஏற்படும். வாழ்க்கையின் போது ஏற்படும் மீட்டலில் அசை போடலில் இவை எல்லாம் ஏற்படுவது சகசம்.


உலகம் தெரியாத வயதில் கள்ளம், க்படம், வஞ்சகம், சூது, வாது இல்லாம் பழகிய அந்த இளம்வயது இனி நமக்குக் கிடைக்காதா என்ற ஏக்கம் ஏற்படவும் செய்யும். தாய் தந்தையரிடம் செய்த வம்பும் அவர்கள் நம்மேல் காட்டிய அன்பும் உடன்பிறந்த சகோதரர்கள், உறவினர், நண்பர், இவர்களிடம் நடத்திய போட்டி, பொறாமை, சண்டை, சமா-தாம், ஆண், பெண் என்ற பால் உணர்ச்சியின்றிப் பழகிய பழக்கம், கல்வி பயின்ற காலத்தில் இருந்த கபடமற்ற நிலை எல்லாம் உலகியல் வாழ்வில் ஈடுபடும்போது ஏதோ கனவில் கண்ட காட்சி போல் மனக்கண்ணில் தோன்றும். இளமையும் நில்லாது என்பது உலகியல் உண்மை என்று ஆறுதலடைய வேண்டியதுதான்.

குழந்தைப் பருவத்தில் இருந்தபோது காலிருந்தும் நடக்கத் தெரியவில்லை, வாய் இருந்தும் பேசத்தெரியவில்லை, கையிருந்தும் எழுது கோலைப்பிடிக்க முடியவில்லை, மனம் இருந்தும் சிந்திக்கத் தெரியவில்லை, காதிருந்தும் கேட்கத் தெரியவில்லை, கண்ணிருந்தும் பார்க்கத் தெரியவில்லை, உலக வாழ்வில் நுழையத் தெரியவில்லை. இதுவே கல்லா இளமை எனப்பட்டது. ஆனால் காளைப்பருவம் ஏற்பட்டதும் கால்கள் பந்தய ஓட்டத்தில் பரிசு வாங்குகின்றன, வாய் பேச்சுப் போட்டியில் "பேச்சாளன்" என்று பெயர் வாங்குகின்றது.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

## அருள்விருந்து

* புலனடக்கம் பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமளவு ஒரு சமுதாயம் மேல்நிலைக்கு வருகிறது.
* கல் ஒன்று அசைவற்றுக் கிடக்கிறது. அதனிடத்துள்ள சாந்தியல்ல நாம் நாடுவது. மனத்தகத்துமிளிரும் தெய்வ சன்னித்தியத்தினின்று பொலியும் சாந்தியே நமக்கு வேண்டும்.



(AP PHOTO)

## குழம்பி நிற்கும்

"சின்னத்திரையின் ஆதிக்கம் குடும்பங்களின் தொடர்புமுறையை அறவே நிறுத்தி விட்டது என்றே கூறலாம். எங்கு சென்றாலும் அன்பான வரவேற்பு கிடைப்பதில்லை. நம்மை இடையூறு செய்பவர்களாகவும், எதிரிகளாகவுமே கருதுகிறார்கள், டீ.வி.யின் பிடியில் சிக்கியுள்ளவர்கள்" என்று சிரிக்கிறார் டாக்டர் லதா.

டைனிங் டேபிளில் குடும்ப சமேதராக இன்முகத்துடன் சந்தோஷமாக ராத்திரி நேரச் சாப்பாடு சாப்பிடும் பழக்கமும் நின்று விட்டது. ப்ளேட்டுகளில் சாப்பாட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு டீ.வி.யின் முன் உட்காருவதே பழக்கமாகி விட்டது.

இதனால் பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. மூளைக்கு வேலையில்லாமல், டீவியையே பார்த்துக்கொண்டிருப்பதால் நம் சிந்தனைச் சக்தி குறைகிறது. முக்கியமாக, இது குழந்தைகளுக்கு கேடு விளைவிக்கும். மேலும் எந்தவிதமான இருதரப்புத் தொடர்புமுறையும் இல்லாததால், குழந்தைகள் உணர்ச்சிகளற்று, மரக்கட்டையைப் போல ஆகக்கூடிய அபாயமும் இருக்கிறது.

இனி நிகழ்ச்சிகளின் தரத்தைப்பற்றிப் பேசுவோம். ஒருபுறம் டீ.வியையே பார்த்துக்கொண்டிருக்கும் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருக்கிறார்கள் என்றால் மறுபுறம், டீ.வியில் வரும் பாத்திரங்கள். இப்போதெல்லாம் டீ.வியில் வஞ்சகமும், பழிக்குப் பழியை நியாப்படுத்தும்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


Since 1987

வசந்தா நகை மாளிகை
வசந்தன் - பத்மநாதன்
பத்தர்களின் கைவண்ணத்தில் தங்கத்தின் புதிய வடிவங்கள்!

Tel: 905 848 5151 OPEN 10:30AM - 8:30PM
Fax: 905 848 8502 MONDAY CLOSED

3025 Hurontario St., Unit. 103A, Mississauga

Singapore Communication
UNBEATABLE PROMOTION
Get Extra $50 Off Handset *
Only $40 ($15 Discounted)
350 Mins Daytime Free
Unlimited Evenings & Weekends
Hurry Offer Ends June 15,2003
OFFICE: 416-740-5282
5010 Steeles Ave. W., Unit 17ABC - (Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

AERO CANADIAN TOUR & TRAVEL INC.
"Something Special on Land & Air"
- World wide Airline tickets
- Canada, U.S.A. Luxury Charted Bus Services
- Colombo Airport<=>Home Land Complete Van/Hotel Arrangement
- Toronto Airport Pickup / Drop Off

TICO

COLOMBO TORONTO $960

Tel: 416-299-8687 Fax: 416-299-5767
3300 McNicoll Ave. Suite 218, Scarborough, ON M1V 5J6
www.aerocanadiantourandtravel.com





# ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**

## இளமையை சிதைக்கும் மனச்சிதைவு

இன்று கனடாவிலுள்ள தமிழ் மக்கள் தொகையில் 20 வீதமானோர் ஏதோ ஒரு விதத்தில் உளநோயினால் பாதிக்கப் பட்டுள்ளனர். இந்த விடயமானது குடும்ப நலனை கருத்தில் கொண்டு வருவது குறைவு.

இந்த நோயை குணமாக்க மாத்திரைகளோ, சிகிச்சைமுறைகளோ கிடையாது. மருத்து வர்களை நாடவேண்டிய அவசியமும் இல்லை. மனநோய் நிபுணர்களை அணுகி ஆலோசனை மட்டும் பெற முடியும்.

அறிகுறிகள்
மனநெகிழ்ச்சி, எண்ணச்சீர்கேடு, சமூகத் தோடு ஒட்டி வாழும் தன்மை இல்லாமை திரிபுணர்ச்சி (எதிர்க்கருத்து) சிறு பிள்ளைத் தனமான நடத்தை என்பன இந்நோயின் அறிகுறிகள். முரண்பாடான மனவெழுச்சியை வெளியில் காட்டும் இவர்கள் எவ்வித காரணமுமின்றி அழுவதும், கோபப்படுவதும், அவ்திப்படுவதும் வாடிக்கை யான செயலா கும். பிறர் இவர்கள் மீது காட்டும் இரக்க த்தை இவர்களால் புரிந்து கொள்ளமுடியாது.

எண்ணக்கோளாறுகள்
இந்த நோயாளிகள் பகுத்தறிவுக்கும் நடைமுறைக்கும் ஒவ்வாத எண்ணங்களைக் கொண்டிருப்பர். மற்றவர்களின் புத்தி மதியைக் கேட்காது தனக்கு எல்லாம் தெரிவது போலவும் நடந்து கொள்வர். எத்தனையோ சொத்துக்கள் வசதிகள் இருந்தாலும் தன்னிடம் இல்லாத ஒன்றைப பற்றி அடிக்கடி நினைத்து அதற்காக ஏங்குவர்.

பேச்சுக் கோளறுகள்
சிந்தனை தெளிவில்லாமல் ஒன்றைப்பற்றி நினைத்துவிட்டு உடனடியாக இன்னுமொரு எண்ணக்கருத்திற்கு தாவுவார்கள் இவர்கள். எவ்வளவு அறிவு உடையவர்களாக இருந்தாலும் நோயின் தன்மை அதிக மாயிருக்கும் போது அவர்களின் அறிவு ஆற்றல் மழுங்கடிக்கப்பட்டு விடுகிறது.

மூன்று வகைகள்
1. சாதாரண வகை
2. சிறுபிள்ளைத்தனம், மடமை என்பன சார்ந்தவை
3. எண்ணக்கோளறுகள், சந்தேகம் நிறைந்த வகை

காரணங்கள்
உடலியல் காரணங்களும் சூழ்நிலை காரணங்களும் இந்நோயின் தோற்றத்திற்கு காரணங்களாகும். உடல் உறுப்புக்களின் சீர்கேடு அதனால் உருவாகும் உவாதைகள், இதன் தொடர்ச்சியான போக்கு என்பன இவர்களை இந்த நிலைக்கு இட்டுச் செல்கிறது. அடுத்து இவர்களின் வாழ்க்கைச் சூழலில் இவர்களுக்கு வேண்டாத சம்பவங்கள் நடப்பது. இவர்களுடன் இணைந்து வாழ்பவர்கள் இவர்களுக்கு ஒவ்வாத கருத்தினைக் கொண்டிருப்பது போன்றவை.

சிகிச்சை முறைகள்
இவர்கள் வாழும் சூழலில் மாற்றத்தைக் கொண்டு வருதல் அவசியம். சிலர் விடயத்தில் மிகுந்த கண்காணிப்புடன் அவர்களின் போக்கில் விட்டுவிடவேண்டும்.

தியானப்பயிற்சி
காலையிலும், மாலையிலும் ஒரு குறிப்பிட்ட நேரமாவது தியானப் பயிற்சி (Meditation) செய்யப் பழக வேண்டும். இதனால் மனம் ஒருவழிப்படுவதோடு, ஒரு கட்டுப்பாட்டுக்குள் வரும்போது சிந்தனை தெளிவாவதோடு எந்த விடயத்தையும் நிதானமாக சிந்தித்து செயல்பட உதவுகிறது.


SAFETY TRUCKS
Training School Ltd.
Training & Trucking
Classes A, D & Z
கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (9ஆம் ஆண்டு)
We Accept Welfare & Unemployment Insurance
வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




In Classes
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

16 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(905) 793-9546 / (416) 616-5979
250 Summerlea Road, Brampton, ON



வாங்க வீடு விற்க
விற்க சசி வாங்க
SASI SELVARATNAM
(Sales Rep)



Homelife/GTA Realty Inc.
Cell :(416) 725 1122
Tel. :(416) 321 6969

HOUSE FOR SALE
BELLAMY & LAWRENCE

2 அறைகள் கொண்ட சிறந்த முறையில் அழகுபடுத்திய தனிவீடு விற்பனைக்குள்ளது. பத்து கார்கள் ஒரே நேரத்தில் தரித்து வைக்கக்கூடிய இட வசதிகள் உண்டு. தொடர்புகளுக்கு:
Cell : (416) 725 1122 Tel. : (416) 321 6969



கடன்கொடுக்கலாம்! வாங்கலாம்!
Mortgage/loans/line of Credit
* வீடு, வியாபாரம், சுயதொழில் - கடன் பெறலாம்.
* Down Payment ஒரு பிரச்சினையா? தயங்காதீர்கள்.
* 2nd, 3rd மோட்கேஜை - ஒன்றாக்கலாம்.





தொடர்புகளிற்கு:- ஜோஜ் பரந்தாமன்
416-332-0933
* வித்தியாசம் அறிய என்னுடனும் தொடர்பு கொள்ளலாம்*.

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing

* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**

**435 Midwest Road. Unit B5,**
**Scarborough, ON. M1P 3A6**

SPECIAL




## பேணப்பட வேண்டிய சொத்துகள்- TREASURED LEGACIES

## இலவச ஒளிப்படக் கண்காட்சி

*FREE EXHIBITION OF PHOTOGRAPHS*

*ரொறொன்ரோவில் முதியோர் மாதத்தைச் சிறப்பிக்க தொடர்ச்சியாக 5 நாட்களுக்கு திங்கள் ஜுன் 2ஆம் திகதி காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை தொடர்ந்து வெள்ளி ஜுன் 6ஆம் திகதி காலை 8 - மாலை முதல் 5 மணிவரை*

*இடம் - TORONTO CITY HALL (ROTUNDA0)*
*100 QUEEN STREET WEST*

*தொலைபேசி 416- 338- 0338*

*கனேடிய முதுபெண்கள் வலயம் ஆதரவளிக்க, திருமதி. ஐரீன் பொரின்ஸ் ஆஷ் - (Irene Borins Ash) அவர்களின் கைவண்ணத்தில் வெற்றிகரமாக வாழ்க்கைச் சவால்களைச் சமாளிக்கும் 41 கனேடிய முதியவர்களின் புகைப்படங்கள், பிரபல டேவிட் சுசுக்கி, ஒஸ்கார் பீட்டர்சன், எட்மேர்விஷ் போன்றவர்களுடன் கனடா ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்வாமி பிரதமானந்தா, ஈழத்தமிழ் மூதாட்டி திருமதி. ஆன் கனகரத்தினம், புற்றுநோயுடன் போராடும் திருமதி சிவா ஞானரத்தினம், கவிஞர் லலிதா புருடி ஆகிய நால்வரின் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளமை எமக்குப் பெருமை சேர்க்கிறது. முதுமையிலும், உடல், உள்ளம், உணர்வு ஆன்மா எனும் சகல பரிணாமாயங்களின் அழகையும் சிறப்பையும் எடுத்துக்காட்டும் இக் கண்கவர் படங்களும், சிறப்புக் குறிப்புகளையும் பார்த்து மகிழுங்கள். தமிழர் தகவல் ஆண்டு விழா நடைபெறும் இடம் இவ்விடம் என்பதும் லலிதா புருடியின் நீதியுடன் சமாதானம், எனும் ஆங்கிலக் கவிதை நூலை கனேடிய முதுபெண்வலயம் வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது.*

---

*நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்*

*கனேடிய புற்றுநோய் சங்க நிதிக்காக நடன ஆசிரியை நிரோதினி பரராஜாசிங்கத்தின் நிருத்திய கலாஞ்சலி வழங்கும் 'நாட்டிய சங்கமம்' எதிர்வரும் சனிக்கிழமை ஜுன் 7ஆம் திகதி மாலை 6:00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்கு தங்கள் ஆதரவை வழங்குவீர்.*

*இடம்:- CARDINAL - NEWMAN Auditorium*
*2675, KINGSTON RD., KINGSTON & BRIMLEY*
*SCARBOROUGH - ON விபரங்களுக்கு :- 416-438-3494*

---

## 2003 T.S.S.A CANADA - பூப்பந்தாட்டப் போட்டி

*தமிழ் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம் கனடா (T.S.S.A CANADA) நடத்தும் எட்டாவது வருடாந்த பூப்பந்தாட்டப் போட்டி (Badminton Tournament) எதிவரும் ஜுன் மாதம் 7ஆம் திகதி புறோக்கிறஸ் அவனியூவில் அமைந்துள்ள சென்ரானியல் கல்லூரி ஜிம்னாசியத்தில் காலை 9.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை நடைபெறவுள்ளது.*

*வியாழக்கிழமை 29ஆம் திகதியும் மேரிதொம்சன் கல்லூரி ஜிம்னாசியத்தில் மாலை 7.00 மணி தொடக்கம் மாலை 9.00 மணி வரையும் நடைபெறும். இதில் பங்கு பற்றுவோரின் விண்ணப்படிவங்களின் முடிவு திகதி ஞாயிறு மே 25, 03. பயிற்சி நடைபெறும் இடத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.*

*இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக திரு.ச. பாலச்சந்திரன் (வருமானவரிப்பரிசோதகர்) கலந்து கொள்வர்.*

*தொடர்புகளுக்கு:- ஜோகரட்ணம் - 416-499-0731, குலநாதன் 416-298-0671,*
*அன்ரன் - 416-287-3402, ரவீந்திரன் - 416-754-2195*


# Get PAID what you're WORTH!

EXCEL
Powered by VarTec Telecom

Would you rather work at home, draw a great INCOME and offer products you believe in? Now you can. Discover what thousands of people know is true. Excel Canada offers you the opportunity to become your own
boss, and live the LIFESTYLE of your choice.

IT'S THE CHANCE TO...

- Offer high-quality products and services
- Do something you believe in
- Live the lifestyle you've always dreamed of!

It's that easy! Call today for more information.
Your SATISFACTION depends on it.

**For More Information Please Contact**

**Thiru Saravanapavan**
Senior Director
National Training Director
**Tel: 416-707-7900**
E-mail:thiru@myexcel.ca
Web. www.excelir.ca/thiru

# தமிழர் நிர்வாகத்தில் ஒரு EMBASSY

**விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்**

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



சமோசாவிற்கு அழையுங்கள்:
416-332-0944

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough **416-332-8451**



# அன்புத் தமிழ்

## புலவர் பெருமை

பெருமைமிக்க புலவர்களின் அன்பையும் உறவையும் பெறுவதற்கு மன்னர்கள் தவங் கிடந்தனர். அவர்கள் தம்மைப் புகழ்ந்து பாடமாட்டார்களா என்று ஏங்கினர். புலவர்கள் வாக்குப் புகழைத் தரும் என்று நம்பினர். அவர்களின் மதிப்பையும் புகழையும் பெறுவதே தமது வாழ்க்கையின் குறிக்கோள் என்று வாழ்ந்தனர்.

## கவிஞர் வி. கந்தவனம்

தமிழ்ப் புலவர்களைப் பெரிதும் மதித்த மன்னர்களுள் ஒருவன் காஞ்சியின் தலைவ-னான நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன். தலையாலங்கானப் போர்க் களத்தில் பகைவரை வென்று புகழ்பெற்ற பெருவீரன். அந்தப் போருக்குப் புறப்படும் வேளை அவன் செய்த சூழுரை இது.

.................................................................

சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படே௭ னாயின்.............

.................................................................

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைக என் நிலவரை
.................................................................(புறம்- 72)

'படைச் செருக்கால் என்னைப் பழித்துரைத்த பகைவரைச் சிதறத் தாக்கி, முரசத்தோடு அவரைச் சிறை செய்யேனாயின், உயர்ந்த புகழும் சிறந்த கேள்வியையுடைய மாங்குடி மருதன் முதல்வனாக உலகம் போற்றும் புலவர்கள் எனது நாட்டைப் பாடாது நீங்குக' என்று கூறும் நெடுஞ்செழியனின் வஞ்சினத் தில்புலவர்கள் போற்றும் வகையில் தனது வாழ்க்கை அமையவேண்டும், தனது நாடு திகழ வேண்டும் என்னும் அவனது ஆவல் வெளிப்படுவதைக் காணலாம்.

புலவர்களும் எல்லோரையும் பாடுவது கிடையாது. அன்பிலே, பண்பிலே, குணத்திலே, நடையிலே, கொடையிலே, வீரத்திலே, தீரத்திலே, கல்வி ஞானத்திலே, நீதி நியாயத்திலே சிறந்தவர்களையே புலவர்கள் பாடுவது வழக்கம். யார் யார் பாடுதற்கு உரியவர்கள் என்பதனை அவ்வைப் பிராட்டியார் ஒரு சந்தர்ப்பத்தில் விளக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. செல்வந்தர் சிலருக்கு தம்மைப்பற்றி அவ்வையார் புகழ்ந்து பாட வேண்டும் என்னும் ஆசை ஏற்பட்டது. அவ்வையாரிடம் தாமே சென்று தமது விருப்பத்தைப் பணிவோடு தெரிவித்தனர். அவர்களின் இயல்பை நன்கு அறிந்த பிராட்டியார் அவர்களுக்குப் பின்வருமாறு அறிவுரை வழங்கின்றார்.

'அயன் அரன் அரி ஆகிய முத்தேவர்களுக்கும் மேலான பரம்பொருளையும் இளமைநலம் மிக்க சேர சோழ பாண்டியரின் சிறப்பையும் பாடிய என்னுடைய பா மணக்கும் வாயினாலே' எம்மையும் பாடுக' என்று நீங்களும் கேட்கின்றீர்கள். உங்களை யான் எவ்வாறு பாடுவேன்? சினங்கொண்ட யானைகள் வெட்டுண்டு வீழ்வதனால் பெருக்கெடுக்கும் இரத்த வெள்ளம் நிறைந்த போர்களத்தைக் கண்ணாலும் காண-ாதவர்கள் நீங்கள். நல்ல யாழ் இசையினையும் விரும்பிக் கேட்கவும் மாட்டீர். புலவர்களின் புலம்பலுக்கு இரங்கி அவர்களது வறுமையைப் போக்க வாரி வழங்கவும் மாட்டீர். உமது மனைவியரையன்றிப் பிற பெண்களை ஏறெடுத்தும் பாராத உத்தமரோ என்றால், அதுவும் இல்லை. சமைத்த உணவின் சுவையன்றித் தமிழ்ச் சுவை அறியீர். நன்றாக உடுக்கவும் மாட்டீர். விருந்தோடு உண்ணவும் மாட்டீர். பிறருக்குக் கொடுக்கவும் மாட்டீர். அறிவுடையார் சொற்கேட்கவும் மாட்டீர். அடர் காட்டில் உயர்மரத்தில் பழுத்த உண்ணுதற்கு உதவாத கனிகளைப் போலத்தோன்றியுள்ளீரே! 'பாடல் இது:

மூவர் கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய என்றன் பனுவல் வாயால்
எம்மையும் பாடுக வென்றனிர் நும்மையிங்கு
எங்ஙனம் பாடுகென் யானே வெங்கட்
களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர்
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர்
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கீர்
இலவு வாய்ச்சியார் இளமுலை புல்லீர்
அவிச்சுவை யல்லது தமிழ்சுவை தெருளீர்
ஒவ்வாக் கானத்து உயர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே!
(-ஔவையார் தனிப்பாடல்கள்)

அதாவது, 'நீங்கள் வீரருமல்லர்; கலைஞருமல்லர்;வறியருக்கு ஈபவருமல்லர்; ஒழுக்க சீலருமல்லர்; தமிழ்ச் சுவைஞரும் அல்லர்; நன்றாக உடுப்பதையோ விருந்தோடு உண்பதையோ இல்லார்க்கு கொடுப்பதையோ பிறர்சொற் கேட்டு அவர் உறவை வளர்ப்பதையோ நீங்கள் செய்பவருமல்லர். ஊருக்கு உதவாத உங்களை யான் எவ்விதம் பாடுவேன்' என்று அவ்வையார் மிக நாகரிகமாகவே அந்தச் செல்வந்தருக்குப் புகழ் வாழ்க்கை என்றால் என்ன என்பது பற்றி ஒரு பாடமே நடத்தியிருப்பதைக் காண்கின்றோம்.

புலவர்களின் பெருமை அறிந்த மன்னர்கள் புலவர்கள் வறுமையுற்றக்கால் பொன்னும் பொருளும் வழங்கி அவர்களை ஆதரிப்பதிலும் இன்பங் கண்டனர். பாரி, ஓரி, மலையமான், அதிகமான், பேகன், ஆய், நள்ளி ஆகிய கடையெழு வள்ளல்கள் புலவர்களை ஆதரித்த புகழ் உடையவர்கள். இவர்கள் காலத்துக்குப் பின் பாடிவருவாரதும் பிறரது துன்பத்தினைப் போக்க கடவேன் யான் என்று இருந்தவன் குமண வள்ளல். தன் தம்பியால் நாடு கொள்ளப்பட்டு காடு பற்றியிருந்த குமணனைக் காணச் சென்றார் பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர். புலவருக்குக் கொடுப்பதற்குத் தகுந்த பொருள் இல்லாத காரணத்தினால் தனது தலையைக் கொய்து தம்பியிடம் கொடுத்துப் பொருள் கொள்ளும்படி புலவரிடம் வாளைக் கொடுத்தான் குமணன்.

தமிழ்ப் புலமைக்காகத் தலையினைக் கொடுத்த குமண வள்ளலின் தமிழ் உணர்ச்சியினை நினைக்குந்தோறும் புல்லரிக்கின்றது. இந்த மரபிலே வந்த வள்ளன்மையாளர்கள் தொடர்ந்தும் தமிழை வளர்த்த வரலாறுகள் இருக்கவே செய்கின்றன. சடையப்ப வள்ளல், சேர். பொன். இரமநாதன், அண்ணாமலைச் செட்டியார் போன்றோரின் தமிழ் உணர்ச்சி சங்கரன் தலையில் ஊற்றெடுக்கும் கங்கையினும் பெரியது.


இந்த மரபை தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் யாம் இப்போதைக்கு எதிர்பார்க்க முடியாதெனினும், இந்நாடுகளில் வெளியிடப்படும் தமிழ் நூல்களையாவது பணங் கொடுத்துவாங்கிப் படிப்போர் தொகை பெருகுமாயின் வெளிநாடுகளிலும் தமிழ் தழைதோங்க வழிபிறக்கும் என்பது உறுதி.


## இசை வகுப்புக்கள்

வாய்ப்பாட்டு, மிருதங்கம், சமய வகுப்புக்கள், சங்கீத வித்துவான் திருமதி உமா சந்திரசேகர், சந்திரசேகர் அவர்களினால் 10 Macey Apartment, Macey Avenue, #601, Victoria park இலும் 7038 Chigwel Court Mississauga L4T 1N4 இலும் நடத்தப்படுகின்றது.
மேலதிக தொடர்புகளுக்கு: 905-672-2164 / pkcshekar@yahoo.com

## VALLIN SUPER MARKET

- Fresh Vegetables
- Meat
- Fish, Groceries Tamil Video & Audio Cassettes



416-724-5453

இவற்றுடன் இலங்கை, இந்திய, கனேடிய உணவுகளையும் தருகிறார்கள்




A VALLIN TAKEOUT & CATERING

416-283-1260

790 Military Trail, Unit #1, Scarborough, ON


## INCOME TAX



Tarsem Parmar

- Incorporation
- Business Set-up & Registration
- Accounting & Bookkeeping
- Payroll, G.S.T. & P.S.T.
- Incomes Taxes (Free E-File)
- CCRA Audit and Appeals

## FINANCIAL SERVICES



- Mortgages
  upto 1.5% below the bank posted rates
- Lines of Credit
- Business Loans
- Personal Loans

## PERMANENT RESIDENT CARDS

Free Applications filled for Seniors for PR Cards
Special Discounted rates to Taxi/Truck Operators, Serving the community since 1992

Scarborough & Markham Area
416-937-1563
2 Irenemount Cres., Markham
(Markham Rd./Steeles Ave.)

Brampton
416-937-1563
8 Strathearn Ave., Unit 1
(Dixie/Steeles)

## சின்னத் திரையால் குடும்பமும் குடும்ப உறவுமுறைகளும் எப்படிப் பாதிக்கப்படுகின்றன?
### பதில் கூறுகிறார் மனோதத்துவ நிபுணர் லதா நித்யானந்த்.

1ஆம் பக்கத்தொடர்ச்சி

கதைகளுமே அதிகம். சின்னக் குழந்தைகளும் 'இது தான் சரி' என்று நம்பி விடுகிறார்கள். இதற்குக் காரணம் ஐந்து வயதிற்குள் உள்ள குழந்தைகளுக்கு, தங்களைச் சுற்றியேதான் உலகம் இருக்கும். எது நடந்தாலும் அது அவர்களுக்காகத்தான் நடப்பதாக நினைக் கிறார்கள். அதனால்தான் 'ஷக்திமான்' போன்ற சீரியலைப் பார்த்து ஐந்தாவது மாடியிலிருந்து குதித்தான் ஐந்து வயதுச் சிறுவன்.

எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் இரண்டு ஆண் குழந்தைகள், அவர்களுடைய தங்கையைக் கால்களைக் கட்டித் தொங்க விட்டார்கள். டீ.வியில் உயர் கட்டடங்களி லிருந்தும், ஹெலிகாப்டரிலிருந்தும் தொங்கும் திகில் நிகழ்ச்சிகளைக் காப்பியடித்து, தங்கள் கற்பானசக்திக்கு ஏற்றவாறு விளையாடியிருக்கி றார்கள்!



அடுத்தது பெண்களின் விஷயத்திற்கு வருவோம். மாமியார்-மருமகள் உறவு ஒரேயடியாக வெட்டுப்பழி, குத்துப்பழியாக இருக்கிறது. அல்லது ஓரேயடியாக இழைந்து பழகும் விதமாகச் சித்தரிக்கப்படுகிறது. இருவரில் ஒருவர் சந்தோஷமாக இருப்பதாகவும், ஒருவர் எப்போதுமே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் காட்டுவதால், 'எதற்கு வீண் வம்பு, சந்தோஷமாக இருப்பவள் மாதிரியே நாமும் நடந்து கொள்ளலாம்" என்று நினைக்கிறார்கள் பெண்கள்.

இளைஞர்களின் நிலைதான் மிகவும் பரிதாபமாக இருக்கிறது. 'ஈவ் டீஸிங்' போன்ற இழிவான செயல்களில் ஈடுபட்டு, காதலித்தவளை கைபிடிக்கலாம், என்கிற செய்தியைத்தான் இளைஞர்களுக்குச் சொல்லுகின்றன. காதலை கண்ணியமாக அணுகும் முறையை நம் இளைஞர்களுக்கு இவைகள் கற்றுக்கொடுப்பதில்லை.

இதையெல்லாம் விடக் கேவலம், நகைச்சுவை எனும் போர்வையில் காண்பிக்கப்படும் நிகழ்ச்சிகளும் திரைப்படங்களும், நம்மைத் தலைகுனிய வைப்பவை. டாய்லெட்டைப் பற்றிய ஜோக்குகளும், செக்ஸ், கெட்டவார்த்தைகள், அடிதடி பெரியவர்களை மரியாதையில்லாமல் நடத்துவது (முக்கியமாக அப்பா அம்மாவை ஏய் கிழவா! ஏய் கிழவி! என்று அழைப்பது) ஊனமுற்றோரை அவமதிப்பது, என்று மனிதநேயத்திற்குப் புறம்பான விஷயங்களையே காண்பிக்கிறார்கள். இளைஞர்களும் மேல்நாட்டு நடை, உடை, பாவனையுடன் கூடவே இந்த வேண்டாத விஷயங்களையும் கற்றுக்கொள்கிறார்கள்.

மற்ற நல்ல



விஷயமான நேரத்திற்கு கடமையை ஆற்றுவது, நேர்மையுடனும் முழுமூச்சுடனும் எடுத்தகாரியத்தை முடிப்பது போன்றவற்றை, இவர்கள் மேல் நாட்டினரிடமிருந்து கற்றுக்கொள்வதாகக் தெரியவில்லை.

எந்த சீரியலை எடுத்தாலும் ஹீரோவாக இருப்பவர் எல்லாம் தெரிந்த புத்திசாலியாகவும், அழகனாகவும் இருக்கின்றான். நம் இளைஞர்களுக்கு இதனால் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது. மேலும் நல்லவர்களாக இருப்பவர்கள் பலவீனமானவர்களாக இருப்பது போலவும், கஷ்டப்படுகிறார்கள் என்கிற மாதிரியும் சித்தரிக்கப்படுவதால், நல்ல நடத்தைக்கு ஊக்கம் கிடைப்பதில்லை.

என்னிடம் சிகிச்சைக்கு வந்த கிராமத்துப் பெண், தன்னுடைய காதலனின் பெயரையும் எரியும் கொள்ளிக்கட்டையினால் தன் தொடையில் எழுதிக்கொண்டாள்! காதலன் கைவிட்டு விட்டான். இனி அந்தப் பெண்ணின் கதி என்ன? சீரியல்களைப் பார்த்து பர்சனாலிட்டிக்கு எத்தனை தூரம் இழுக்கு ஏற்படுகிறது பாருங்கள்? நம் இளைய சமுதாயம் ஒரேயடியாக குழம்பிப் போயிருப்பதற்குக் காரணம் சின்னத்திரையே! இப்பொழுது ஒரு பயங்கரமான போக்கு ஒன்று கிளம்பியிருக்கிறது. வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனை ஆயிரமாயிரம் பார்வையாளர்களின் மத்தியில் கூறு போட்டு அலசப்பட்டு வருகின்றன. இதைக் கையாளுபவர்களுக்கு மனோவிஞ்ஞானத்தைப் பற்றிய அறிவோ, அனுபவமோ கிடையாது!

ஆனால் எந்த ஒரு பிரச்சனைக்கும் இரண்டு பக்கம் இருக்கிறது. பெரும்பாலும் ஒரு பக்கத்தையே நாம் பார்க்கிறோம். நீண்ட நாள் பிரச்சனைக்கு ஒரு மணி நேரத்திற்குள் எவராலும் தீர்வு காண முடியாது.

ஆனால் இந்த மாதிரி சீரியல்களில் பொதுமக்களின் கண் முன்னால் சம்பந்தப்பட்டவர்களின் உணர்ச்சிப்பெருக்கை கிளறி விட்டுவிட்டு அவர்களது பிரச்சனைக ளுக்கு முழுமையான தீர்வுகாணாமல் விட்டு விடுவது அபயமானது. பார்க்கிறவர்கள் ஒரு பக்க நியாயத்தையே தங்கள் வாழ்க்கையிலும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

மொத்தத்தில் சின்னத் திரையினால் நம் சமுதாயத்தின் எண்ணங்களும், அபிப்பிரா யங்களும், நெறிகளும் மாறிக் கொண்டிருக் கின்றன. விரைவில் குடும்பங்கள் விழித் தெழ வேண்டியது அவசியம்.

நன்றி: மங்கையர்மலர்










Shree Shan B.Sc (Comp Sc. Hons)
IT Consultant



# நாமும் நமது இல்லமும் 165

இவ் ஆண்டின் (2003) முதல் 5 மாதங்கள் கழிந்து விட்டன. மிகுதி 7 மாதங்கள் வீடு விலைமாற்றத்தில், மோட் கேஜ் வட்டி வீதத்தில் என்ன நடக்கலாம். பங்குச்சந்தையில் என்ன நடக்கலாம். என்ற தொடர்ச்சியான கேள்விகள், பதில்கள்...

இதற்கு முன் சில தரவுகளைப் பார்ப்போம். முதலாம் திகதி ஜனவரி 2003ஆம் ஆண்டு ஒரு கனடிய டொலரின் பெறுமதி 63.81 US இற்கு சமனாக இருந்தது. மே மாதம், 2003 இல் ஒரு கனடிய டொலரின் பெறுமதி 73.81 ஆக ஏறியது. அண்ணளவாக 15% கனடிய டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளது. ரொறொன்ரோவின் வாடகைக்கான இடம் கிடைக்கும் வசதி (Vacancy Rate) 0%. ரொறொரோவின் டிசம்பர் 2002 இல் இடம் கிடைக்கும் வசதி (Vacancy Rate) 2.5%. ரொன்றொன்ரோவின் டிசம்பரில் 2003 இடம் கிடைக்கும் வசதி 3.5% (எதிர்பார்ப்பு)

அதாவது Vacancy Rate அதிகரிக்கின்றது. இப்பொழுது ரொறொன்ரோவில் வாடகைக்கு இருப்பவர்களின் எண்ணிக்கை 600,000 ஆகு ம். Vacancy Rate அதிகரிப்பதால் வாடகை குறையும் சாத்தியம் உண்டு.

## ராஜா மகேந்திரன்

ரொறொன்ரோவில் 2002இல் விற்கப்பட்ட புதிய வீடுகளின் எண்ணிக்கை 55,000. ஏற்க னவே வாடகைக்கு இருந்தவர்களும் வீடு களை வாங்கி இப்பொழுது வீட்டு சொந்தக் காரர் ஆகின்றார்கள். அடுத்து மூன்று வருடங்களில் 15,000 இலிருந்து 20,000 வரை புதிய வாடகை வீடுகள் சந்தைக்கு வர இருக்கின்றன. இதனைவிட வீட்டின் கீழ்ப் பகுதி (Basement) Apartment களும் உரு வாகின்றன. (இந்த எண்ணிக்கை சரியாக கணக்கிட முடியாது) இதனால் வாடகையில் குறைவு ஏற்படச்சாத்தியக் கூறும் இருக் கின்றன.

இன்றைய நிலைப்பாட்டில் கனடிய சனத் தொகையில் ஏற்படும் வீழ்ச் சியை தவிர்ப் பதற்காக, கனடிய நாட்டிற்குள் ஆகக் குறைந்தது சனத்தொகையின் 1%ஆன மக்களை நாட்டிற்குள் கொண்டு வருவது என்பதே நோக்கம். இதிலும் வயது குறைந்த வர்களைக் கொண்டுவர விரும்புகிறது. மேற்குலக நாடுகளில் மக்களின் சனத்தொகை முதிர்ச்சி அடைவதால் வயது குறைந்த புதிய வர வாளர்கள் நாட்டிற்கு தேவைப்படுகிறது. உதாரணமாக கனடிய நாட்டின் மக்கள் முதிர்ச்சி அடைகின்றது. பிறப்பு வீதம் கிட்டத்தட்ட 1% இற்கு குறை வாகவும் இருப்பதால் சனத்தொகையின் அதிகரிப்பு நாட்டிற்கு தேவை எனவே புதிய வரவாளர்களின் வருகையைப் பொறுத்தே கனடிய/ரொன்றொன்ரோ வீட்டின் விலையின் மாற்றத்தை நிர்ணயிக்கமுடியும்.

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் சராசரி வீட்டு விலை கிட்டத்தட்ட $300,000 ஐ எட்டியுள்ளது. இது முன்னைய அதிகூடிய விலையாக $278,081 சராசரி விலையை விட அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பு, கிட்டத் தட்ட 13 வருடத்திற்கு பின்னர் இந்நிலையை அடைந்துள்ளது. இந்த விலைமாற்றம் தொடர்ந்து இருக்குமா அல்லது இவ்வாறே இருக்குமா? வட்டி வீதம் அதிகரிப்பு ஏற்பட் டால் விற்பனையின் எண்ணிக்கை குறைய சாத்தியம் உண்டு. இதனால் விலையில் இறக்கம் ஏற்படலாம். ஆனால் அமெரிக்க பொருளாதாரத்தில் முன்னேற்றம் இல்லாததால், வட்டி வீதம் அதிகரிக்கும் என எதிர்க்க முடியாது. இதனால் கனடிய வட்டிவீதத்தில் உடனடியாக பெரிய அதிகரிப்பு மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கமுடியாது. இருந்தும் இந்த கிழமை மோட்கேஜ் வட்டிவீதம் எதிர்பார்க்காதளவிற்கு குறைந்துள்ளது. ஐந்து வருடவட்டி வீதம் 4.85 வீதமாகக் குறைந்துள்ளது.


**HOUSE FOR SALE**



- 4 BEDROOM
- 2 BEDROOM BSMT APT.
- SEP. ENTRANCE
- 2 KITCHEN • 4 WASHROOM
- MORNINGSIDE& OLD FINCH
- HARDWOOD FLOOR
- Asking only $329,000.00

**HOUSE FOR SALE**



- BRAMPTON
- 3 BEDROOMS
- ONLY 1½ YEARS OLD
- DOUBLE ATTACHED GARAGE & 2 DOORS • BRICK HOUSE
- PRICE $264,900.00



**Raja M. Mahendran, P. Eng.**
Vice President/Sales Rep.
HOMELIFE HIGHER STANDARDS
Office - Tel.: (416) 321-6969
Fax: (416) 321-6963
Direct: (416) 315-9397
Pager (416) 589-4270
Fax:(416) 282-4978
Email: raja@mahendran.ca



| Interest Rate | |
|---|---|
| 5YrsMortgage | 5.20% |
| Prime rate | 4.75% |
| Bank rate | 3.00% |


**Neelam silk**

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

**நீலம் சில்க்**



2003ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

T.P: 416-778-455
Fax: 416-778-8484
1453 GERRAD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

**YARLCAN**
**STEAM CLEANING**



உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-

* DUCT CLEANING
* CARPET CLEANING

மோகன்: (905) 887-7436 ஸிாலல: (416) 721-9709

**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிட உரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்




www.kalakalappu.net

கலகலப்பு தீசன் 416-490-9199



# விண்வெளி 120

## கனி

### நட்சத்திரங்கள்

*பட்டொளி வீசும்*
*சிட்டுத் தாரகைகளே-உங்கள்*
*கட்டெழில் கலைந்து*
*காணாமல் போவது எங்ஙனம்.*

பிறக்கின்ற நட்சத்திரங்களெல்லாம் இறக்கின்றன! இறந்தே ஆக வேண்டும்! என்று கண்டு கொண்டோம். நட்சத்திரங்களின் இறப்புக்கு ஐதரசனே காரணம் (பிறப்பு இருப்புக்கு கூட இந்த ஐதரசனே காரணம் எனவும் முன்னர் பார்த்தோம் அல்லவா!) எனினும் அவை ஒவ்வொன்றும் இறந்து முடிவடையும் நிலை வேறு வேறானவை. இதற்கும் கூட அடிப்படைக் காரணம் ஐதரசனைத் தான் கூறவேண்டும். ஏனெனில் நட்சத்திரத்தின் நிலைப்பாட்டினை அதன் திணிவு பெரும்பாலும் நிர்ணயிக்கிறது. அத்திணிவு நட்சத்திரம் கொண்டுள்ள ஐதரசன் அளவிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளது.

பொதுவாக கூறின் நட்சத்திரங்களில் ஒரு வகையைச் சிறிய நட்சத்திரங்கள் எனக்கூறலாம். நமது சூரியனை விடச் சிறியதான திணிவு குறைந்த இவை 100, 200 Billion வருடங்களுக்கு உயிரோடு இருந்து பின்னர் அமைதியாகப் படிப்படியாக வெப்ப நிலையைக் குறைத்து White dwarf வெண்குள்ளர்கள் ஆக மாறிவிடும். இவ்வகையில் ஆன வெண்குள்ளர்கள் எதுவும் எமது பிரபஞ்சத்தில் இல்லை. தர்க்கரீதியாகவே இக் கூற்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஏனெனில் எமது பிரபஞ்சம் தோன்றி 15 அல்லது 20 பில்லியன் வருடங்கள் தான் ஆகியுள்ளது. எனவே எந்தவொரு நட்சத்திரமும் 100 பில்லியன் வருடங்கள் கடந்திருக்கமுடியாது. ஆனால் எமது பிரபஞ்சத்தில் விண்வெளியில் பல White dwarf வெண்குள்ளர்கள் ஆங்காங்கே உள்ளனர். அவை வேறு வழிகளில் வெண்குள்ளர்கள் ஆனவை.

நடுத்தர திணிவுடைய நட்சத்திரங்களும் திணிவு கூடிய நட்சத்திரங்களும், திணிவு குறைந்த நட்சத்திரங்களைப்போல் ஒடுங்கிப் போகாமல் வேறு பெரிய பெரிய விளைவுகளைக் காட்டுகின்றன. இயற்கையின் பெரிய அதிசயங்களின் ஆரம்ப ஊற்றுக்களாக இப் பெரிய நட்சத்திரங்கள் அவற்றின் இருப்பின் போது காணப்படுகின்றன. மிகவும் சுவரிசியமான இந்த நிகழ்ச்சியினைப் பார்ப்போம்.

ஐதரசன் உருகல் நின்றவுடன் நட்சத்திரம் இறக்கத் தொடங்குகின்றது. ஐதரசன் உருகல் நின்றவுடன் நட்சத்திரத்தின் வெப்பநிலை குறையத் தொடங்குகின்றது. இதன் காரணமாக நட்சத்திரம் சிகப்பு அல்லது மென்சிகப்பு நிறமாகின்றது. அத்துடன் வெப்பநிலை குறைந்ததினால், நட்சத்திரத்தினுள் எஞ்சி இருந்த சிறிதளது ஐதரசனுக்கு, ஐதரசன் உருகல் நிலைக்கு தேவையான வெப்பநிலை இல்லாது போகிறது. எனவே ஐதரசனுக்கு சக்தியைப் பிறப்பிக்க இயலாது போகிறது. வெப்பநிலை குறைவு என்பதனால் ஈர்ப்பு விசையின் ஆதிக்கம் கூட ஐதரசன் ஓட்டிற்கு உள்ளே உள்ள பகுதி சுருங்கத் தொடங்கும். ஆனால் ஐதரசன் ஓட்டின் காரணமாக நட்சத்திரத்தின் வெளிப்பகுதி சுருங்காது அப்படியே இருக்கும்.
இனி ஐதரசன் ஓட்டின் உள்ளே உள்ள பகுதி சுருங்குவதனால் அணுக்கள் நெருக்கப்பட வெப்பநிலை அதிகரிக்கும். இதன் காரணமாக நட்சத்திரத்தின் மையப்பகுதியில் வெளி அமுக்கவிசை ஏற்படும். இவ் அமுக்கம் அணுக்களை வெளியே தள்ளும். எனவே விரிவடையத் தொடங்கி பெரிய நட்சத்திரமாக மாறும். நட்சத்திரங்களின் திணிவுகளுக்கு ஏற்ப, விரிவடைந்த சென்னிற நட்சத்திரம் இராட்சத நட்சத்திரமாக (Giant Star) அல்லது அதி இராட்சத நட்சத்திரம் (Supper Giant Star) மாறும்.

இந்நிலையில் நமது சூரியன் போன்ற நடுத்தர திணிவுடைய நட்சத்திரங்களின் ஆரை 10 மடங்கால் அதிகரிக்கும் சூரியனின் திணிவினைப் போல் 10 மடங்கு திணிவுடைய நட்சத்திரங்களின் ஆரையானது 100 மடங்கு அதிகமாக அதிகரிக்கும். இவையே அதி இராட்சத நட்சத்திரங்களாக மாறும். நமது சூரியனும் இன்னமும் 5½ பில்லியன் வருடங்களில் இருந்து ஒரு இராட்சத நட்சத்திரமாக மாறும். அவ்விதம் இராட்சத நட்சத்திரமாக மாறுகையில் விரிவடைந்து புதன் கிரகத்தையும், வெள்ளி கிரகத்தையும் தன்னுள் அடக்கி விடும் அளவிற்கு நமது சூரியன் பெரியதாகிவிடும். அந்த நிலையில் நமது பூமி சூரியனுக்கு மிக கிட்டவாக இருக்கும்/ இன்னமும் 5½ பில்லியன் வருடங்களில் நமது பூமி என்னவாக இருக்கும் என எண்ணுகின்றீர்கள்?


WINDOW COVERING

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

BLINDS
DRAPERIES AND
SHUTTERS
• Venetian Blinds
• Vertical Blinds
• Roller Shades
• Pleated Shades
• Cellular Shades

FREE ESTIMATE



இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

விபரங்களுக்கு: என். செல்வம்
416.332.8482 /416.419.9247 / 905.201.7733



EDUCATION FUND SERVICES Inc.

The Children's Education Trust of Canada

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்



Siva Kanapathypillai
(Divisional Director)

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!

சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-6044
Fax: 416-438-8532 Res: 905-472-1139
1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.

முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.



மணப்பெண் அலங்காரம்
கேக் மேக்கிங்
Bridal Dressing & Cake Making

Modern Cake Decoration





UK Sugar Craft
Wilton U.S.A. Method



- Paper Tole • பேப்பர் ரோல்
- Cake Decoration • கேக் மேக்கிங்
- Bead Jewellery • முத்து நகை மாலை
- Hair Styling • தலை அலங்காரம்
- Facial (Herbal) • பேசியல்
- Bridal Dressing • மணப்பெண் அலங்க்ராம்
- Normal Dressing • சேலை அலங்கரித்து விடுதல்
- Eye Brow Shaping • கண் புருவ அலங்காரம்
- Saree Tassel • சாறி குஞ்சம்
- Saree Pleating • சாறி மடிப்புக்கள்

Mathumai S.
Diploma Holder of Mallika School of Home Science - Sri Lanka
Tel: 416-424-2528



## மும்முனைப் போட்டியில் நியூசிலாந்து சம்பியன்
## விளையாட்டுத் தகவல்கள் - 124 கிரிக்கெட்

சிறிலங்கா, பாகிஸ்தான், நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகள் மோதிய மும்முனைப்போட்டியில் (ALFALAH CUP 2003) நியூசிலாந்து 13, பாகிஸ்தான் 12, சிறிலங்கா 11 புள்ளிகள் பெற்றன. மூன்று நாடுகளும் தலா 2ஆட்டங்களை வென்றன. ஆனால் "Bonus" புள்ளியை சிறிலங்கா இறுதியாட்டத்தில் இழந்ததால் சிறிலங்கா விற்கு கைக்கு எட்டிய வெற்றி வாய்க்கு எட்டவில்லை". இதனால் பாகிஸ்தானும் நியூசிலாந்தும் இறுதி யாட்டத்தில் மோதின.

தம்புல்ல சிறிலங்கா, மே 24: இலங்கையில் நடைபெற்ற மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து சம்பியன் பட்டத்தைச் தட்டிச் சென்றது.



தம்புல்லவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து 4 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்தது.

முதலில் ஆடிய பாகிஸ்தான் 50 ஓவர்களில் 198 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தது. தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து 4.4 ஓவர்கள் மீதமிருக்கையில் 6 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்கள் எடுத்து வெற்றி கண்டது.

டாஸில் வென்ற பாகிஸ்தான் காப்டன் ரஷீத் லத்தீஃப் துடுப்பைத் தேர்ந்தெடுத்தார்.
முதல் ஓவரிலேயே விக்கெட்: டாரில் டஃபி வீசிய ஆட்டத்தின் முதல் ஓவரிலேயே தொடக்க ஆட்டக்காரர் முகமது ஹஃபீஸ் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

51 ஒரு தின ஆட்டங்களில் 11-வது முறையாக டஃபி முதல் ஓவரிலேயே விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

11 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் பாகிஸ்தான் 2 விக்கெட்டுகளை இழந்தது.

யூனிஸ் கான் 17-வது அரை சதம்: எனினும், யூனிஸ் கான் 85 பந்துகளில் 7 பவுண்டரி களுடன் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களும், ஷோயப் மாலிக் 34 ஓட்டங்களும், யூசுப் யோஹானா 3 பவுண்டரிகளுடன் 25 ஓட்டங்களும் சேர்த்து அணியின் ஸ்கோர் 200 ஓட்டங்களுக்கு அருகில் வருமாறு செய்தனர்.

83 ஒரு தின ஆட்டங்களில் யூனிஸ் கான் எடுத்துள்ள 17-வது அரை சதம் இது.
நியூசிலாந்து தரப்பில் ஜேகப் ஓரம், டாரில் டஃபி தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஃபிளெமிங் அபாரம்: நியூஸிலாந்தின் இன்னிங்ஸில், தொடக்க ஆட்டக்காரர்கள் ஃபிளெமிங், நெவின் இணைந்து 54 ஓட்டங்கள் சேர்த்து அணிக்கு வலுவான அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர்.

ஃபிளெமிங் 111 பந்துகளில் 3 பிரமாண்ட சிக்சர்கள், 5 பவுண்டரிகளுடன் 65 ஓட்டங்கள் குவித்து அணிக்கு வெற்றி தேடித் தந்தார்.

பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் உதிரிகளை (44 ஓட்டங்கள்) வாரி வழங்கினர். நியூசிலாந்து அணியின் 2-வது அதிகபட்சமே உதிரிகள்தான்.

பாகிஸ்தான் தரப்பில் முகமது சமி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

வெளிநாட்டில் 2-வது பட்டம்: வெளிநாட்டில் நியூசிலாந்து வென்றுள்ள 2-வது பட்டம் இது. இதற்கு முன்னர் 2000-ம் ஆண்டில் கென்யாவில் நடைபெற்ற ICC கிண்ணத்தை நியூசிலாந்து கைப்பற்றியது.

அக்தர் இல்லை: செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி லீக் ஆட்டத்தின் போது பந்தை சேதப்படுத்தியதைத் தொடர்ந்து 2 ஆட்டங்களில் விளையாட பாகிஸ்தானின் புயல் வேகப் பந்து வீச்சாளர் ஷோயப் அக்தருக்கு தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த ஆட்டத்தில் அவர் இடம்பெறவில்லை.

வரலாற்றில் இடம்பிடித்த மே.இ.தீவுகள் வெற்றி செயின்ட் ஜான்ஸில் முடிவுற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 4-வது மற்றும் இறுதி கிரிக்கெட் டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் 7 விக்கெட் இழப்புக்கு 418 ஓட்டங்கள் எடுத்து வென்றது.
கடைசி இன்னிங்ஸில் அதிகபட்ச ஓட்டங்கள் எடுத்து வென்றதற்கான புதிய சாதனையை மேற்கிந்தியத் தீவுகள் படைத்தது.

**எஸ். கணேஷ்**

கடைசி இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவித்து வென்றவற்றில் முதல் 10 இடங்களைப் பிடித்த அணிகளின் விவரம்: (ஸ்கோர், வென்ற அணி, எதிரணி, இடம், ஆண்டு என்ற வரிசையில்.....)

(1)418-7, மேற்கிந்திய தீவுகள், அவுஸ்திரேலியா, செயின்ட் ஜான்ஸ், 2003;
(2) 406-4 இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், போர்ட் ஆஃப் ஸ்பெயின், 1976;
(3) 404-3 அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, லீட்ஸ், 1948;
(4) 369-6 அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், ஹோபார்ட், 1999-00;
(5) 362-7 அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், ஜார்ஜ் டவுன், 1977-78;
(6) 348-5 மே.இ. தீவுகள், நியூசிலாந்து, ஆக்லாந்து, 1968-69
(7) 344-1 மே.இ. தீவுகள், இங்கிலாந்து, லார்வாட்ஸ், 1984;
(8) 342-8 அவுஸ்திரேலியா, இந்தியா, பெர்த், 1977-78
(9) 340-5 தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, டர்பன், 2001-02;
(10) 336-5, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, டர்பன், 1949-50

வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை
விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.


# NEW PUNJAB TRUCK & FORKLIFT

*Training School*



- LOW RATE
- GET TRUCK LICENSE AT HALF RATE
- FORKLIFT LICENSE $99.00



➜ Air Brakes, ➜ Defensive Driving ➜ log book ➜ dangerous Goods
➜ 1 Classroom Training, ➜ One to Ont Training, ➜ City & Highways.

**Jasbir Singh or Sukhwant singh - Tel:905-564-5393**
**1339 Khalsa Dr. Mississauga**

# யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

**416-299-8361**

# MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 5.20% on $100,000.00 per month installment comes out $601.11. For different time period closing rates are given below*



Mortgage Rates (மோட்கேஜ் வட்டி வீதம்)

| Period | Rate of interest |
|---|---|
| 6 month | 4.55% |
| 1 Year | 3.90% |
| 2 Year | 4.50% |
| 3 Year | 4.65% |
| 4 Year | 4.85% |
| 5 Year | 5.25% |
| 7 Year | 5.90% |
| 10 Year | 6.15% |

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply



For more information call:
**Anil Joshi at**
**416.888.1072**

## சின்னவயதுக் குறும்புகளை சிந்தனை செய்தால் சிரிப்பு வரும்

1ஆம் பக்கத்தொடர்ச்சி



கண்கள் நல்ல காட்சியைக் கண்டு மகிழ்கின்றன. தீயதை நீக்குகின்றன. மனம் தக்கது இது தகாதது இது என்று பகுத்தறிவால் சிந்தித்துப் பாகுபடுத்தி செயல்படுகின்றது. காலமும் பருவமுமே இதற்கெல்லாம் காரணமாகும். பிறத்தலும் வளர்த்தலும், பருவமடைதலும் வாழ்தலும் மறைதலும் இயற்கை அன்னையின் ஏவலுக்கேற்ப காலதேவன் செய்து வரும் கடமையாகும். இவற்றிலிருந்து எவருமே விலகிவிடமுடியாது என்பது உண்மையாகும்.

அது ஓர் அழகிய சிற்றூர். அங்கு மக்கள் பலர் வாழ்கின்றனர். சில வீடுகள் பக்கத்தில் அடுத்தடுத்து இருக்கின்றன. அங்கு மனையறத்தின் தனிச் செல்வமான மக்கள் ஆணும் பெண்ணுமாக பலர் இருக்கின்றனர். அக்குடும்பங்களுக் கிடையில் உறவு முறை இல்லாவிட்டாலும் குடும்ப உறுப்பினர் போல் எல்லோரும் பழகி வருகின்றனர். உலகியல் தெரிந்த பெரியவர்கள் ஒருவருக்கு

### நா. க. சிவராமலிங்கம்

மற்றொருவர் விட்டுக் கொடுத்து மனம் விட்டுப் பழகிவருகின்றார்கள். ஆனால் அங்கு உறையும் சிறுவர்கள் உலகியல் தெரிந்த பேரறிஞர்களா? அல்லவே ஆனால் ஒருவருக்குகொருவர் விளையாடும் போது சண்டையிட்டுக் கொள்கிறார்கள். இதைப் பார்த்து ஒரு நடுவயதுப் பெண் விலகி விடுகின்றாள்.

பையன் தன்னிடம் சண்டையிட்டு பெண் குழந்தையின் தலைமயிரைப் பற்றி இழுக்கின்றான். அப் பெண்பிள்ளையும் அந்தப் பையனின் தலைமயிரைப் பற்றி இழுத்து அடிக்க வருகின்றான். இவ்வாறு நடைபெறும் குடும்பிப்பிடி சண்டையைப் பார்த்து செவிலித்தாய் இருவரையும் விலக்கிவிட்டாள். அப்போதும் சினம் குறையாமல் அழுது கொண்டிருக்கிறாள் அப்பெண். பெரியவர்கள் அன்பாக வாழும் போது இச்சின்னஞ்சிறிசுகள் ஏன் சண்டையிடுகிறார்கள் என்று அங்கலாய்த்துக் கொண்டாள் அச்செவிலித்தாய். அச் சிறுவனும் சிறுமியும் மனம் அடங்கினாலும் சினம் அடங்காமல் வீடு செல்கின்றார்கள்.

காலம் உருண்டோடியது அச்சிறுவனும் சிறுமியும் பருவம் எய்தி உருவும் திருவும் பெற்று குணமும் அன்பும் மிக்கு ஒப்புமை உடையவராய் ஒரு தன்மையராய் உடன் போக்காய் செல்கின்றார்கள். அவ்வழியில் சென்ற ஒரு பெண் இவர்கள் உளங்கலந்த காதலர்களாய் செல்வதைப் பார்த்தாள். பழையநினைவு அவளது நெஞ்சில் நிழலாடியது. இளமையில் சண்டைபிடித்த இவர்கள் இருவரும் நிலவும் ஒளியும் போலவும் மலரும் மணமும் போலவும் பாலும் சுவையும் போலவும் செல்கிறார்களே. இது காலத்தின் கனிவினால் ஏற்பட்ட இனிமையல்லவா என்று வியக்கின்றாள். மலர்ந்தமுகமே வாழ்க்கையின் இன்பத்திற்கு அடிப்படையாகும். எனவே இவர்கள் வாழ்நாள் முழுவதும் வளமுடன் வாழ்வதற்க்கு வாழ்த்துக்கூறிச் செல்கின்றாள் அப்பெண். காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதல்லவா உண்மையான உறுதியான இன்பம். இதுதான் அப்பாடல்.



"இவனிவள் ஐம்பால் பற்றவும் இவளிவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்
காதல் செவிலியர் தவிர்ப்பும் தவிராது
எதில் சிறு செரு உறு மண்ணோ
நல்லைமண் அம்ம பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்ன இவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே"


**RASANAYAGAM ANTONYPILLAI, B.Sc. Agr.**

RE/MAX Golden Way Realty Inc.



வீடு விற்க, வாங்க, வாடகைக்கு பெற, பெற்றுக் கொடுக்க அழையுங்கள் - ராஜன் அன்ரனி

**Office: 416-299-8199**
**Home: 416-516-9897**
**Pager: 416-510-7755**

**3390 MIDLAND AVE.**
**UNIT 8, TORONTO, ON.**
**M1V 5K3**



# New Kalyani Catering & Take out

**NOW**

**292 Markham Road, Scarborough, Ontario**

**416-261-9774**



**நியூ கல்யாணி தனது 9 ஆவது வருடத்தை முன்னிட்டு வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை May 15th, 2003 ஆரம்பிக்கின்றது**

__வாரத்தில் ஏழு நாட்களும்__

**Lunch Special**

Madras chicken Buriyani $3.99
Jaffna Buriyani $4.99

**Dinner Special**

Megoring Noodles Chicken $3.99
*(Malasiyan Style)*

வாரத்தில் ஏழு நாட்களும்

**இடியப்பம் 6¢**

500க்கு மேல் கொள்வனவு செய்தால் 5¢
ரொட்டி (பறோட்டா) 50¢
100க்கு மேல் கொள்வனவு செய்தால் 40¢

__ஒவ்வொரு திங்கள் முதல் - புதன் வரை__ __Lunch Special__

Vegitable Thali $2.99

__*Dinner Special*__

Singapore Noodles $2.99

__ஒவ்வொரு வியாழன் முதல் - வெள்ளி வரை__

__Lunch Special__

விரதச் சாப்பாடு 10 பதார்த்தங்களும் வழங்கப்படும் $3.99

__*Dinner Special*__

மசாலா தோசை $2.49
Plan தோசை $1.99
5 இட்லி $1.99
(சாம்பார், சட்னி இலவசம்)


__சனிமுதல் - ஞாயிறு வரை__

**Lunch Special**

முத்துச்சம்பா 10 பதார்த்தங்களுடன் வாழையிலையில்

**Dinner Special**

கொத்து ரொட்டி(கோழி, ஆடு, மாடு)



சனி, ஞாயிறு- தீவக மக்களின் முறைப்படி விஷேசமாக தயாரிக்கப்படும் கூழ் $3.99

எந்த நேரத்திலும் எவ்வளவு ஆனாலும் ஓடராக செய்து பெற்றுக் கொள்ளலாம். மற்றும் (Ceylon Bakery பாண் வகைகள், Cake வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து சிற்றுண்டி வகைகளும் மலிவு விலையில் செய்து தரப்படும். எந்த விதமான கொண்டாட்டங்களானாலும் மலிவு விலைகளில் Catering செய்து தரப்படும்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



நான் வாழ்விற்குப் பயன்பட, பிரயோசனப்பட நான்தான் அனுமதி கொடுக்க வேண்டும் என்பதை நான் உணரும் போது எனது வாழ்வு வளம் பெறும். ஒவ்வொருநாளும் சில நிமிடங்கள் பிரார்த்தனை மூலம் இறைவனுடன் சம்பாசிப்பதுதான் நீ உனக்கு செய்யக்கூடிய மிகப் பெரிய சேவை. இது உன் உண்மை ஸ்வரூபத்துடன் நீ கழிக்க வேண்டிய நேரம். உன்னை ஊக்குவிக்கும் சக்தியாகிய உள் மூலாதாரத்தின் செயற்பாட்டிற்கு பிரயோசனப்பட இந்த நேரத்தை ஒதுக்கிவிடு. உனது வாழ்வின் குறிக்கோளைப் பற்றிச் சிந்திக்க இந்த மௌனம் உதவும். இது உனக்கு தெளிவையும் நம்பிக்கையையும் அளிக்கும். உனது உள்ளத்தையும் ஆன்மீகத்தையும் ஊக்குவிக்கும். மௌனம் உனக்கு பல நன்மைகளைத் தரும்.

### லலிதா புரூடி

இறை பிரார்த்தனைதான் உனக்கும் உன் பிரியமானவர்களுக்கும் நீ அளிக்கக் கூடிய மிகச் சிறந்த வெகுமதி. உன்னை சிருஷ்டித்த இறைவனைத் தினசரி போற்றிப் பிரார்த்திப்பது உனக்கு எல்லையில்லா சக்தியைத் தரும். நாமஸ்ம நிலையினால் இறைவனின் அருள் உன் ஆன்மாவை நிரப்பும். உன்னைச் சுத்திகரிக்கும், பிரச்சினையில்லாத இனிமையான வாழ்விற்கு வழிவகுக்கும்.

இறையருளுக்கும், உனக்குக் கிட்டிய ஆசீர்வாதங்கள் யாவற்றிற்கும் நன்றி சொல்லிப் பிரார்த்திப்பது தான் நீ இறைவனுக்கு அளிக்கக்கூடிய மிகச்சிறந்த வெகுமதி. வாழ்வு உனக்கூடாகச் செயற்படுவதை நீ அங்கீகரித்து நன்றி செலுத்து. அது உன் குற்றங்குறைகளை குணப்படுத்தி உன்னை வழிநடத்துகின்றது. நன்றி கலந்த மௌனமான தியானம், பிரார்த்தனை உன்னை உயர்த்தி அன்பு மயமானவராக்குகின்றது.

இன்றுவரை அரை மனதுடன் ஏனோதானோவென்று அவசர அவசரமாக நீ பிரார்த்திருக்கலாம். இன்று முதல் தினசரி பத்து நிமிடங்கள், மௌனமாக அன்புடன் இறைவன் நாமஸ்ம நிலை செய்து உன்வாழ்வில் இறைவனை ஒளி வீச வழி செய்துகொள். நேரமில்லையே என்று புலம்பாதே. காலையில் குளிக்கும் போது, பள்ளிக்கு அல்லது வேலைக்குப் போகும் போது மௌனமாக இறை பிரார்த்தனையாக உன் மனதை நிரப்பப் பழகிக்கொள். உன்மனதின் எஜமானன் நீ. மனம் உன் எஜமானன் அல்ல என்பதை உணர்ந்து உன் மனதின் ஓட்டத்திற்கு கடிவாளமிட்டு அதை அடக்கியாளப் பழகிக் கொள். முயற்சி செய்து பார். நிச்சயம் வெற்றி அடைவாய். தொடரும்

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள்
- 905-624-9617



pundit prithipal



astrologer

*Solutions for black magic, evil spirits, drinking problems, family related problems, money problems, love relationships, and much more!*

*Forecasting includes, palm readings, sun sign analysis, name readings, birthday readings, love and health, and money chances*




*CALL TODAY at 905-678-8932!*

Pundit Prithipal
26 Sledman St.
Malton, ON
L4T 1K5

tel: 905-678-8932
fax: 905-612-0906
cell: 416-219-7054
e-mail: pundit@punditprithipal.com
website: www.punditprithipal.com

Free Consultation! Call for help today - "I understand your Problems"





வீடு விற்க, வாங்க, மற்றும் குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குபடுத்திக் கொள்ள, இலவச ஆலோசனைகளிற்கும் ஆகக் கூடிய வீடுகளை விற்கும் வீட்டுப் பிரதிநிதி "கேதா"வை நாடுங்கள்.



தொடர்புகளிற்கு: **416.677.4707**

**24 hrs**



# ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன் சோதீஸ்
இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




THIS MONTH SPECIAL

JUNE CLEARNCE SALE
ALL NEW & USED CAR ON BOTTOM PRICE

**416-704-1179**


அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm
4334 Kingston Rd, Scarborough






# NTE AUTO


New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



**SIVABALAN**
**416.750.1573**

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

# COLOMBO PHOTO STUDIO

(DIVISION OF ST. FRANCIS PHOTO)

DIGITAL PHOTO STUDIO

WEDDING,
BIRTHDAY,
ARANKETTAM,
BABY PHOTO,
FAMILY PORTRAIT,
PASSPORT, CITIZEN,
PUBERTY CEREMONY,
P.R CARD, ID PHOTO
ETC.........


416 752 4444



"Professional Photo & Videography
All Types of Video & Photographics Work"

Digital Special Effect
From $25.00

**DIGITAL VIDEO TRANSFER**
ANY TO ANY SYSTEM PAL, NTSC, SECAM
FROM VIDEO CASSETTE TO VCD OR DVD



BESIDE THE 41 DIVISION POLICE,
KANCHI SILK
& PRIYA CONVENIENCE PLAZA

**FREE FREE FREE**
